# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2015 - 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழர் தம் உயிரினும் மேலாகப் போற்றியது

அ) பணத்தை ஆ) மானத்தை

இ) சினத்தை ஈ) செல்வத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் பூ

அ) மருதம் ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) குறிஞ்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. நிலவியற்கையில் முதற்பொருளாக அமைவது

அ) நிலம் ஆ) தொழில் இ) கலை ஈ) நிலைத்திணை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. தன்னினம் அழிவதற்குத் தானே காரணமாக இருப்பவனை இவ்வாறு அழைப்பர்.

அ) புற்றீசல் ஆ) கோடரிக்காம்பு

இ) விட்டிற்பூச்சி ஈ) விலாங்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. திணைகள் ____________________ வகைப்படும்.

அ) மூன்று ஆ) இரண்டு இ) ஏழு ஈ) ஆறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. மன்னார்அமுதன் எழுதிய கவிதை

அ) நேரம்இதுதான் ஆ) வெந்ததேசிந்தை

இ) எழுத்தாணி ஏந்தும் ஈசர்கள் ஈ) ஓடிடும் தமிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. கவிஞன் தான்காணும் காட்சி ஒன்றைத் தன் கற்பனை ஒன்றுடன் இணைத்துக் கூறுவது

அ) உவமையணி ஆ) உருவகஅணி

இ) சிலேடையணி ஈ) தற்குறிப்பேற்றஅணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பின்வருவனவற்றுள் சுட்டெழுத்து

அ) எ ஆ) ஆ இ) அ ஈ) யா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. வடக்கில் இருந்து வீசும் காற்று

அ) தென்றல் ஆ) கோடை இ) வாடை ஈ) கொண்டல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. கலிங்கத்துப்பரணி பாடப்பட்டது

அ) சேரமன்னன்மீது ஆ) பல்லவமன்னன்மீது

இ) பாண்டியமன்னன்மீது ஈ) சோழமன்னன்மீது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. ஒப்புயர்வற்ற உலக இலக்கியம் எனப்போற்றப்படுவது

அ) மணிமேகலை ஆ) நாலடியார்

இ) சிலப்பதிகாரம் ஈ) திருக்குறள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. தமிழர் பண்பாடு என்பது

அ) 3ஆம் வேற்றுமைத்தொகை ஆ) 5ஆம் வேற்றுமைத்தொகை

இ) 2ஆம் வேற்றுமைத்தொகை ஈ) 6ஆம் வேற்றுமைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. அகம் என்ற சொல் குறிப்பது

அ) வீரத்தை ஆ) போரை இ) கொடையை ஈ) காதலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. போரிலே தவறுதலாகப் புறப்புண் பட்டதனால் வடக்கிருந்து உயிர்நீத்த மன்னன்

அ) சோழமன்னன் ஆ) பல்லவமன்னன்

இ) சேரமன்னன் ஈ) பாண்டியமன்னன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. காவியா அழகாக வரைந்தாள். இச்சொல்லியத்தில் மறைந்து நிற்கும் சொல்லிய உறுப்பு

அ) எழுவாய் ஆ) அடைமொழி

இ) பயனிலை ஈ) செயப்படுபொருள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. இலெமூரியா என அழைக்கப்பட்டது

அ) குமரிக்கண்டம் ஆ) மெசப்பத்தேமியா

இ) சிந்துவெளி ஈ) ஈரான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. **க, ய, ஞ** என்பன

அ) உயிரெழுத்துகள் ஆ) மெய்யெழுத்துகள்

இ) உயிர்மெய்யெழுத்துகள் ஈ) சுட்டெழுத்துகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18.தென்னாடு பெற்ற செல்வத்தென்றலே எனப்பாடியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) நல்லத்துவனார்

இ) கண்ணதாசன் ஈ) பாவேந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. அதைப்போன்றது எனக் கூறாமல் அதுவே இது எனக் கூறும் அணி

அ) உவமையணி ஆ) எதுகையணி

இ) உருவகவணி ஈ) சிலேடையணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. மண் + குடம் என்பதைப் புணர்த்தினால்

அ) மண்குடம் ஆ) மட்குடம்

இ) மண்ங்குடம் ஈ) மட்க்குடம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பின்வருவோரில் ஐம்பெருங்குழுவில் அடங்குபவர்

அ) தந்தை ஆ) புலவர்

இ) படைத்தலைவர் ஈ) வணிகர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. கடலும் கடல் சார்ந்த இடமும்

அ) முல்லை ஆ) மருதம் இ) நெய்தல் ஈ) குறிஞ்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. அல்வழிப் புணர்ச்சி

அ) இரண்டுவகை ஆ) மூன்றுவகை

இ) நான்குவகை ஈ) ஐந்துவகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. சிந்துவெளியில் காணப்பட்ட நகரங்களில் ஒன்று

அ) மெசப்பத்தேமியா ஆ) நாவலந்தீவு

இ) மொகஞ்சதாரோ ஈ) வேங்கடம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** ஆகிய எழுத்துகள்

அ) மெய்யெழுத்துகள் ஆ) குற்றெழுத்துகள்

இ) நெட்டெழுத்துகள் ஈ) இனவெழுத்துகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. **பாடுகின்றீர்கள்** என்ற வினைச்சொல்

அ) படர்க்கை ஆ) முன்னிலை இ) தன்மை ஈ) ஒருமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. மூவேந்தர்களிடையே பகைமையை ஊட்டியவர்கள்

அ) தமிழர் ஆ) ஐரோப்பியர் இ) சிங்களவர் ஈ) ஆரியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. நாட்டுக்காய் உழையுங்கள். இச்சொல்லியம்

அ) வினா ஆ) கூற்று இ) வியப்பு ஈ) ஏவல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. ஆரியம் தமிழர்களைத் தாழ்த்துவது கண்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கனன்று எழுந்த கவிஞன்

அ) இளங்கோ ஆ) பாரதியார் இ) ஔவையார் ஈ) திருவள்ளுவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. தனக்கு நிகரான ஆற்றல் உடையோரை எதிர்த்துப் போரிடுவது

அ) புகழ் ஆ) செல்வம் இ) ஈகம் ஈ) வீரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

யாழ்ப்பாணத்தில் சுண்ணாகம் என்ற ஊரில் குமாரசுவாமிப் புலவர் 18.01.1854ல் பிறந்தார். இவரது தந்தை தனது மகன் குமாரசுவாமிப் புலவரைச் சிறுவயதிலேயே மல்லாகத்திலுள்ள ஆங்கிலப் பாடசாலையில் கல்விகற்க அனுப்பிவைத்தார். குமாரசுவாமிப் புலவர் ஆங்கிலத்தில் புலமை பெற்றபின்னர் தந்தையார் இவரை ஆங்கிலப் பள்ளியை விட்டு இடைநிறுத்திச் சுண்ணாகம் முருகேசபண்டிதரிடம் தமிழ்கற்க அனுப்பி வைத்தார். இவர் மாணவனாக இருந்த போதே சொல்லும்பொருளும் சுவைபடப் பல பாடல்களைப் பாடினார். கட்டுரை வரைவதிலும் சொற்பொழிவு ஆற்றுவதிலும் குமாரசுவாமிப் புலவர் திறமைபெற்றிருந்தார். இதனால் இளமைப் பருவத்திலே குமாரசுவாமி என்ற பெயருடன் புலவர் என்ற பட்டத்தினை வழங்கினர். அன்றில் இருந்தே இவர் குமாரசுவாமிப் புலவர் என அழைக்கப்பட்டார். இவர் ஆறுமுகநாவலருடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். சைவப்பற்றுள்ள குமாரசுவாமிப் புலவர் பல சமய நூல்களையும் பதிகங்களையும் எழுதியுள்ளார். அத்துடன் யாப்பருங்கலக்காரிகை, ஆசாரக்கோவை, நான்மணிக்கடிகை போன்ற பல நூல்களையும் பதிப்பித்தார். நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் எழுதிய கல்வளையந்தாதி என்ற நூலுக்கு குமாரசுவாமிப்புலவர் பதவுரை எழுதியுள்ளார். சி.வை.தாமோதரம்பிள்ளையால் முதன்முதலில் நிறுவப்பட்டதமிழ்ப் பள்ளியான சைவப்பிரகாசவித்தியாசாலையில் குமாரசுவாமிப்புலவர் தலைமையாசிரியராகப் பணிபுரிந்தார். இவரது தமிழ்ப் புலமையை அறிந்த மதுரைத் தமிழ்க்கழகம் இவரை ஒரு உறுப்பினராக இணைத்துக் கொண்டது. குமாரசுவாமிப்புலவர் 23.03.1922 அன்று நோயினால் இயற்கை எய்தினார். இவரது மாணக்கனான பண்டிதமணி கணபதிப்பிள்ளை என்பவரே இறுதிக்காலத்தில் புலவருக்குப் பணிவிடை செய்தார்.

1. குமாரசுவாமிப்புலவர் யாரிடம் தமிழ் கற்றார்?

2. குமாரசுவாமிப்புலவர் எவற்றில் திறமை பெற்றிருந்தார்?

3. குமாரசுவாமிப்புலவர் யாருடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார்?

4. கல்வளையந்தாதி என்ற நூலை எழுதியவர் யார்?

5. எப்பள்ளியில் குமாரசுவாமிப்புலவர் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்தார்?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. யாழ்ப்பாண அரசில் ஆரியம் விரவியமைக்குச் சான்றாக விளங்குபவை யாவை?

2. வடக்கிருத்தல் என்றால் என்ன?

3. கவிஞர் தாமரைக்கண்ணனின் ஏக்கம் என்ன?

4. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என நிலவியற்கையை வகுத்தவர்கள் யார்?

5. ஆரியர் தமிழரிடையே புகுத்திய திருமண வழக்காறுகள் எவை?

6. மரணத்திற்கும் அஞ்சாது உளஉரத்தோடு தம்மையே ஒப்புக் கொடுக்கத் தயங்காதவர்கள் யாரென்று கவிஞர் மன்னார் அமுதன் கூறுகின்றார்?

7. பழந்தமிழ் மக்கள் வகுத்துள்ள சிறுபொழுதுகள் எவை?

புள்ளிகள் 10

4) **கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

தாய்க்கு நிகர் உலகில் வேறுண்டோ
தரணி வந்த தெய்வம் அவளன்றோ

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. அ. சுட்டெழுத்துகள் எத்தனை?

______________________________________________

ஆ. அவை எவை?

______________________________________________

2. இலக்கண வகையால் காலங்கள் எத்தனை?

______________________________________________

பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

அ. எதிர்காலம் :-

______________________________________________

ஆ. நிகழ்காலம் :-

______________________________________________

3. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

அ. பெயர்ச்சொல் :-

______________________________________________

ஆ. இடைச்சொல் :-

______________________________________________

இ. உரிச்சொல் :-

______________________________________________

4. அ. வினா எழுத்துகள் எத்தனை?

______________________________

ஆ. மொழிக்கு இறுதியில் மட்டும் வரும் வினா எழுத்துகள் எவை?

______________________________

5. எடுத்துக்காட்டுகள் தருக.

அ. 3ஆம் வேற்றுமைத்தொகை :-

______________________________

ஆ. உம்மைத்தொகை :-

______________________________

இ. உவமைத்தொகை :-

______________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

நட்பு என்பது ஓர் தூய்மையான உறவாகும். இத்தகைய நட்பு உண்மையாக இல்லாவிட்டால் அது எமது வாழ்க்கையைத் துன்பமாக்கிவிடும். ஏனெனில் பகைவனைவிடப் போலி நண்பனோ நண்பியோதான் எமக்கு மிகவும் துன்பத்தைத் தரக்கூடியவர்கள். அத்தகைய கூடா நட்புப்பற்றித் திருவள்ளுவர் பத்துக் குறட்பாக்களில் மிகத்தெளிவாகக் கூறியுள்ளார். இவர் கூடா நட்புப்பற்றி மட்டுமல்ல நட்பாராய்தல் எனும் அதிகாரத்தில் நல்ல நட்பை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் விளக்கியுள்ளார். நட்புப் பற்றி வள்ளுவர் ஐந்து அதிகாரங்களில் ஐம்பது குறட்பாக்களில் மிகச்சிறப்பாகக் கூறியுள்ளமையிலிருந்தே நட்பின் சிறப்புப் பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். உயிர் கொடுப்பான் தோழன் என்று கூறுமளவிற்கு அன்றைய நட்பு அமைந்திருந்தது. இன்றைய பொறிமுறை உலகில் உண்மை நட்பானது குறைந்து கொண்டே போகின்றது என்று தான் கூற வேண்டும். நல்ல நட்பு என்றும் மாறாது. தீய நட்பு நின்று நிலைக்காது. உண்மை நட்பே என்றும் உயர்வானது.

**சுருக்கத்திற்கான குறிப்புக்கள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ தேவையில் எழுந்த  காலத்தின் கவிதைகள் என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள காலத்தின்  கவிதைகள் பற்றிய உமது கருத்து.

★ ஆரியர் வருகை தமிழரது இலக்கியங்களிலும் வழக்காறுகளிலும் ஏற்படுத்திய தாக்கம் பற்றி நீர் அறிந்து கொண்டமை.

★ ''தாய்மொழியும் தாய்நாடும் தாய்தந்தை போலாகும்'' இக்கூற்றினை விளக்கிக் கட்டுரை எழுதுக.

புள்ளிகள் 20